முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1636

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.03.2024**, வெள்ளிக்கிழமை

1. கருணை வடிவான அரங்கனே
   கலியுகத்தின் ஞான தேசிகனே
   பெருமை மிக்க தர்மசாலை அமைத்து
   பேருலகம் எங்கும் தர்மம் பரப்புகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 09ம் நாள், 22.03.2024, வெள்ளிக்கிழமை)
   வரமாக நீதரும் தீட்சைவழி
   வையகத்தில் சுப்பிரமணியர் யானும் வலம் வருகின்றேன்
3. வருகின்றேன் அன்பர்கள் உள்ளத்தே
   ஆற்றலாய் யானே இறங்கி
   அற்புதத்தை கலியில் நடத்த உள்ளேன்
   அன்பு கொண்டு அரங்கன் தர்மத்தை ஏற்று
4. ஆற்றல்பட ஓங்காரக் குடிலில் சரணாகதி கொண்டு
   உத்தமமாய் தர்மவேலிக்குள் நுழைந்து
   உயர்வாய் தர்மசேவையில் உதவி
   உத்தமமாய் தொண்டு புரியும் அன்பர்கள் அனைவருக்கும்
5. சத்திய நெறிவழி வாழ்வும்
   சரவணச்சுடராக ஆறுமுகன் என் ஆசியும்
   உத்தமமாய் நற்குடி சிறப்பு
   உயர்வான தொழில் தனவளம்
6. மெத்தவே இந்த உலகோர் வியக்க
   மேலான ஞானபலம் ஆற்றல்
   இத்தரையில் அனைத்தும் வரமாகக் கிட்டி
   இனிதே இயம்பிடுவேன் அரங்கன் ஆசிவழி
7. ஆசிவழி அனைத்து ஆற்றலும் கூடி
   அகிலத்தில் மாற்றம் புரிவேன்
   அன்னதனால் ஓங்காரக்குடில் நோக்கி
   அனைவரும் வருகை புரிந்து

8. மேன்மை பொருந்திய அகத்தியர் சன்மார்க்க சங்கமும்
மேலான சுத்தசைவ நெறியை கொள்கையாக ஏற்று உலக மக்கள்
அன்னதானத்தில் உதவி உயிர்க்கொலை நீக்கி இனிதே வாழ
தயவானவர்களாகவும் தயாபரன் யான் விரும்பி ஏற்கின்ற ஞானிகளாகவும்

9. ஆகவே மக்கள் எல்லாம் மாற்றம் கண்டு
அகிலத்தில் அரங்கன் வழி
உருவாகுகின்ற ஞான யுகத்தில் இடம்பெற்று
ஞானஆட்சி தரக்கூடும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–